THE HON. SRI M. BHAKTAVATSALAM : எட்டு - ஸ்பிண்டில் ராட்டை இன்னும் பரீக்ஷை செய்யப்பட்டு வருகிறது என்று முன்பே சொன்னேன். இது வேலையில்லாதவர்களுக்கு ஒரு நல்ல சாதனம் தான். அதை அதிகமாக விஸ்தரிக்க, அவைகள் அதிகமாகச் செய்யப்பட வேண்டும். இந்த ராஜ்யத்தில் இரண்டு இடங்களில் மாதம் 200 வீதம் செய்யப்படுகிறது, இவைகளெல்லாம் வாங்கப்படுகிறது. அதை பரப்புவது சம்பந்தமாக வேண்டிய பணம் பொருத்தவரையில் கஷ்டம் ஒன்றும் இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே, அம்பர் சர்க்காவை கிராம குடிசைத் தொழில் அபிவிருத்திக்கு உபயோகிக்க நோக்கம் இருப்பதாலும், கிராம பொதுமக்கள் பெரிதும் விரும்புவதாலும், தனிப்பட்டவர்கள் கேட்டால், உடனடியாக அப்படிக் கேட்பவர்களுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் முன்வருவார்களா, வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலில் உபயோகிப்பதில் பயிற்சி வேண்டும். பயிற்ச்சி இல்லாதவர்களுக்கு கொடுக்கக் கூடாது. கேட்பவர்களுக்கு எல்லாம் கொடுப்பது என்றால், அந்த அளவுக்கு அம்பர் சர்க்கா உற்பத்தியாகவில்லை.

SRI M. WILLIAM : Will the Government be pleased to start Ambar Charka training centres in each block development area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not practicable to start more centres than are being opened now because of so many other difficulties.

SRI A. CHIDAMBARANATHA NADAR : What is the principle on which Ambar Charkas are distributed to each district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is mostly concentrated in the block development areas.

SRI M. JAGANNATHAN : Arising out of the answer of the Hon. Minister that the Khadi Development Commission has not yet granted interest-free loans for 1958–59 to our State, may I know whether this inordinate delay in getting loans has adversely affected some of our khadi development schemes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No; it is not so. Our programme is not at all affected. What I meant was, the exact amount that was available for this year had not yet been known.

Zonal Police Force.

* 279 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the present stage of the proposal to constitute a Zonal Police Force; and

(*b*) the probable saving to the State exchequer by the implementation of the said proposal?

18th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The proceedings of the Conference of the Inspectors-General of Police of the four Southern States (viz., Madras, Andhra Pradesh, Kerala and Mysore) on the formation of a common Police Reserve Force for the Southern Zone are under the consideration of the Southern Zonal Council.

(*b*) The probable saving, if any, can be decided only after a decision is reached regarding the financial arrangements for the maintenance of the Zonal Police Force.

SRI S. LAZAR : சார், இப்பொழுது இருக்கக்கூடிய போலீஸ் படையினர் எண்ணிக்கை பலம் அதிகமாக இருக்க வேண்டியது என்பது திட்டத்தில் மேற்பட்டு இருந்தால், மேலும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினாலும், அதிகப்படியான போலீஸ் படையினரை ரெக்ரூட் செய்ய சர்க்காருக்கு யோசனை உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மண்டல ராஜ்யங்களைப் பொறுத்தமட்டில், போலீஸ் பாதுகாப்பிற்காக செலவு எதுவும் இல்லை. சம்பந்தப்பட்ட ராஜ்யங்களுக்கு, சிக்கனம் ஏற்படவேண்டும் என்பதுதான் இந்த திட்டத்தின் அடிப்படையான கருத்து.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know the decision of the Conference of Inspectors-General of Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Inspectors-General of Police cannot take any decisions. They have discussed the question and made recommendations which are before the Southern Zonal Council.

SRI M. KALYANASUNDARAM : இந்தப் பொதுவான போலீஸ் படையை அமைப்பதின் நோக்கம் சிக்கனம் ஒன்றுதான் காரணமா, அல்லது வேறு காரணங்கள் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் சிக்கனம்தான் காரணம். சிலருக்கு வேறு அச்சம் இருக்கலாம். (சிரிப்பு.)

SRI K. B. S. MANI : இந்த போலீஸ் படைக்கு சிக்கனம்தான் காரணமாக இருந்தால், இப்பொழுது இருக்கிற போலீஸ்காரர்கள் எண்ணிக்கையைக் குறைக்க யோசனை உண்டா ? அந்த ஏற்பாட்டினால், சம்பளக் குறைவு ஏற்படுத்த யோசனை ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவசியமானால், போலீஸ் படையைக் குறைக்கவும் வேண்டியிருக்கும். ஆனால், இதில் சம்பள விஷயம் ஒன்றும் இல்லை.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ராஜ்யத்திற்கு ஒரு போலீஸ் படையும், ராஜ்யம் பூராவக்கு ஒரு ராணுவமும் என்ற நிலைமையில் சிக்கனம் இருக்க முடியாது. சிக்கனமான முறையில் இருக்கவேண்டும் என்று கூறிவிட்டால்மட்டும் போதாது. ஆகவே, ராணுவத்தை, வட நாட்டிற்கு ஒன்று, தென்னாட்டிற்கு ஒன்று என்று தனித் தனியாக அமைக்க பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுடையவும், அவர்கள் கட்சியினருடையவும் கனவு நனவாகும் போது, அப்படிச் செய்யலாம். (சிரிப்பு.) ஆனால், இப்பொழுது ராணுவத்தைப் பிரிக்கவே முடியாது.